செய்தி வெளியீடு எண்.684 நாள். 24.10.2007

# இரண்டாம் முறையாக உலக சதுரங்கச் சாம்பியன் பட்டம் வென்ற திரு. விசுவநாதன் ஆனந்த் அவர்களுக்கு ரூ. 25 இலட்சம் பரிசுத் தொகை

## முதலமைச்சர் கலைஞர் வழங்கினார்

தமிழகத்தைச் சேர்ந்த புகழ்பெற்ற சதுரங்க விளையாட்டு வீரர் திரு. விசுவநாதன் ஆனந்த் அவர்கள் 2000 ஆண்டில் ஈரான் தலைநகர் டெக்ரானில் நடைபெற்ற உலக அளவிலான சதுரங்கப் போட்டியில் வென்று உலக சாம்பியன் பட்டத்தை முதன் முதலாகப் பெற்றார். அவரது வெற்றியைப் பாராட்டி தமிழக அரசு விழா நடத்தி, அந்த விழாவில் சென்னை கோயம்பேட்டிலுள்ள தெற்காசிய விளையாட்டு கிராமத்தில் உயர் வருவாய்ப் பிரிவு குடியிருப்பு ஒன்றைப் பரிசாக வழங்கியது.

அண்மையில் மெக்சிகோவில் நடைபெற்ற உலக சதுரங்க விளையாட்டுப் போட்டியில் தற்பொழுது இரண்டாவது முறையாக உலக சதுரங்கச் சாம்பியன் பட்டம் வென்று இந்தியத் திருநாட்டிற்கும், தமிழகத்திற்கும் உலக அரங்கில் மீண்டும் பெருமை தேடித் தந்துள்ளார். இந்த மகத்தான சாதனையைப் பாராட்டி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் திரு. விசுவநாதன் ஆனந்த் அவர்களுக்குத் தமிழக அரசின் சார்பில் 25 இலட்ச ரூபாய் ஊக்கப் பரிசாக வழங்கப்படும் என அறிவித்திருந்தார்.

அந்த அறிவிப்பின்படி இன்று (24.10.2007) தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற பரிசளிப்பு நிகழ்ச்சிக்குத் தமது துணைவியார் திருமதி அருணா விசுவநாதன் ஆனந்த் அவர்களுடன் வருகைபுரிந்த திரு. விசுவநாதன் ஆனந்த் அவர்களுக்கு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 25 இலட்ச ரூபாய்க்கான காசோலையை வழங்கி வாழ்த்துகள் கூறினார்.

இந்நிகழ்வின்போது மின்துறை அமைச்சர் திரு. ஆற்காடு நா. வீராசாமி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின், செய்தித் துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி, சுற்றுச்சூழல் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுலா மற்றும் பத்திரப் பதிவுத் துறை அமைச்சர் திரு. என். சுரேஷ் ராஜன், மீன்வளத் துறை அமைச்சர் திரு. கே.பி.பி. சாமி, பால் வளத்துறை அமைச்சர் திரு. உ. மதிவாணன் ஆகியோரும் தலைமைச் செயலாளர் திரு. எல்.கே. திரிபாதி, உள் துறைச் செயலாளர், திருமதி எஸ். மாலதி, நிதித் துறைச் செயலாளர், திரு. கு. ஞானதேசிகன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறைச் செயலாளர் திரு. எம். இராமன், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் திரு. அதுல்ய மிஸ்ரா ஆகியோரும் உடனிருந்தனர்.

***

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.